1974 மார்ச் 15]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளியில் அதிகமான மாணவர்கள் வகுப்பில் படிக்காமல், வெட்ட வெளியேயிருந்து படிக்கின்ற காரணத்தால், குறைக்கப்பட்ட தொகையை யாவது உடனடியாக ஒதுக்கி, கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ரூ. 36,000 செலவில் கட்டிடம் கட்ட ஒரு பிரேரணை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

*Symposium on ground water*

* 434 *Q.* THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether any International Symposium on Development of Ground Water Resources was held at Madras during November 1973, and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) & (இ) நிலத்திற்குக் கீழே புதையுண்ட நீரின் வளம் பற்றிய அனைத்து நாட்டு கருத்தரங்கு ஒன்று 1973-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ம் நாளிலிருந்து 29-ம் நாள் வரை கிண்டி பொறியியல் கல்லூரியில் நடந்தேறியது. இக்கருத்தரங்கு நில நீர் துறையில் பணியாற்றும் பல்வேறு அறிவியல், புவியியல் வல்லுநர்களையும் ஒருமிக்கக்கூட்டி நிலநீர் வளத்தைப் பயன்படுத்துவதில் அவர்கள் எதிர்நோக்கிய பல்வேறு சிக்கல்களை விவாதிக்க உதவியதோடு இப்பொருள் பற்றிய தற்போது நிலவிவரும் புதிய கருத்துக்களை அறியவும் உதவிற்று. இதையொட்டி ஒரு பொருட்காட்சியும் நடைபெற்றது.

திரு. எம். சுரேந்திரன் : சார், நிலத்திற்குக் கீழுள்ள நீரைக் கொண்டு வருவது பற்றிய கருத்தரங்கின் காரணமாக நம்முடைய மாநிலத்திற்கு எந்த அளவிற்கு, என்னவிதமான பயன்கள் கிடைத்திருக்கின்றன ? நம்முடைய மாநிலத்தைப்பற்றி ஏற்கெனவே ஆராயப்பட்டு, நிலநீர் சம்பந்தமாக ஒரு முடிவை அரசாங்கம் எடுத்திருப்பதாகத் தெரிகிறதே, அதற்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே, அதை இன்னும் விரைவுபடுத்துகின்ற வகையிலே இந்தக் கருத்தரங்கு அமைந்திருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் கருத்தரங்கு 3, 4 நாட்கள் நடைபெற்று மிகப் பயன் அளித்துள்ளது என்றுதான் குறிப்பு உள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த

||1974 மார்ச் 15

292 பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள். இந்தியாவைத் தவிர 13 வெளிநாடுகளிலிருந்து 34 அண்டர்கிரவுண்டு வாட்டர் எக்ஸ்பர்ட்ஸ் கலந்துகொண்டு ஆலோசனை கூறி இருக்கிறார்கள் இக் கருத்தரங்கில் 12 தொழில் நுட்பக் கட்டுரைகள் படிக்கப்பட்டுள்ளன. அவற்றில், புதிதாகவகுக்கப்பட்டிருக்கின்ற நவீன முறைகளையெல்லாம் நடைமுறைபடுத்துவதுபற்றி வல்லுநர்கள் கருத்து தெரிவித்து, நன்கு ஆராயப்பட்டிருக்கிறது.

பொருட்காட்சியை பொருத்தமட்டில், தமிழ்நாட்டிலே எங்கெங்கு நிலநீர் இருக்கிறது என்பதற்கான வரைபடங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கருத்தரங்கு, தமிழகத்திலே அடித்தளத்திலே இருக்கிற நீரை மேலே கொண்டுவருவதற்குப் பெரிதும் பயன்பட்டது என்று குறிப்பு கூறுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே நிலத்தடி நீர் வளத்தை கண்டுபிடிக்க தமிழ்நாட்டிலே கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் இருக்கிறது. அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில், அந்த அறிக்கை பல இடங்களிலே தவறான தகவலைத் தந்திருக்கிறது. அந்த அறிக்கையைப் புதிதாக மாற்றி அமைத்து, எங்கெங்கு உண்மையாக நீர் வளம் இருக்கிறது என்று கண்டு பிடிக்க இந்த சியம்போசியம் பயன்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த அறிக்கை சரியானதா, தவறானதா, என்று நாமே யாரும் கூறுவதற்கில்லை அத்துறை வல்லுநர்கள்தான கூறவேண்டும். இந்தக் கருத்தரங்குக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. புதிய கருத்துக்கள், புதிய போக்குகள், புதிய முறைகள் ஆகியவற்றைப் பற்றி கலந்துகொள்கின்ற அளவுக்கு வல்லுநர்கள் இதில் கலந்துகொண்டு உரையாடியிருக்கிறார்கள். நிலத்தடி தண்ணீரைப் பற்றிய பொறி இயல் வல்லுநர்கள், பொதுப் பணியைச் சேர்ந்தவர்கள், மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள், வேளாண்மைத் துறையைச் சேர்ந்தவர்கள், தொழில் நுட்பக் கல்வியைச் சேர்ந்தவர்கள், இப்படிப்பட்ட பல்வேறு துறையினர் கலந்துகொண்டு ஆராயப்பட்ட கருத்துக்கள் எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக அமையும் என்று கூறப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த தமிழகத்திலே உள்ள நலநீர் வட ஆற்காடு போன்ற இடங்களிலே, விவசாயிகள் கடன் வாங்க... ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கருத்தரங்கு பற்றிய கேள்வி இது. அதுபற்றி கேள்வி கேளுங்கள்.

திரு. கே. எ. வகாப்: விவசாயிகள் கடன் பெறுவதிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பி. டபிள்யூ. டி. பற்றி வேண்டாம். அமைச்சரவர்கள் கருத்தரங்கு பற்றித்தான் என்று.. ..

1974 மார்ச் 15]

திரு. கே. எ. வகாப்: இந்தக் கருத்தரங்கினால் விவசாயிகளுக்கு பலன் ஏற்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். சில தவறான முடிவுகளினால் விவசாயிகள் கடன் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. கடன் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டார்களா? அவர்களுக்கு ஏதாவது நல்ல ஆலோசனை கூறப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த நிலத்தடி நீரை வெளிக்கொண்டுவருகிற முயற்சியை மேற்கொள்கிற துறை வேறு. அறிவியல் கருத்துக்கள், தொழிலியல் கருத்துக்கள் பெறுவது வேறு. தொழில் நுட்பக் கருத்துக்களை பரிமாறிக் கொண்டு நல்ல முறைகளை எப்படிக் கையாளலாம், எப்படி அவற்றைக் கையாண்டு வெற்றி பெறுகிறார்கள் என்பதைப்பற்றி ஆராய நடத்தப்பட்ட கருத்தரங்கு இது. இக்கருத்தரங்கு, தமிழகத்திலே தீவிரமாகவும், மிக நல்லமுறையிலேயும் திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுவனவாக அமையும். அறிக்கைகள், மேற்கொண்டிருக்கிற நடைமுறைகள் பற்றி, அதற்கென்று தனியாக இருக்கிற துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்களுக்குத் தனிக்கேள்வி போடவும்.

"தமிழ் அரசு"

*435 வினா—திரு. தி.சி. ஃ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "தமிழ் அரசு" மாதம் ஒன்றுக்கு எத்தனை பிரதிகள் அச்சடிக்கப் படுகிறது?

(இ) அப்பிரதிகளில் எத்தனை இலவசமாக வழங்கப்படுகிறது?

(உ) அப்பத்திரிகை பிரசுரம் செய்வதில் அரசுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (அ)—(உ) மாதம் ஒன்றுக்கு தமிழ் 38,500 பிரதிகளும், ஆங்கிலம் 3,000 பிரதிகளும் அச்சடிக்கப்படுகிறது.

இலவசப்பட்டியல் மூலம் சுமார் 1,150 இதழ்கள் இலவசமாக வழங்கப் படுகிறது.

அரசு நடத்தும் ஏடு லாபநஷ்டத்தைக் கருதி நடத்தப்படும் ஏடு அல்ல. அரசின் பல சாதனைகளைப் பற்றிய கட்டுரைகள், கவிதை, வெண்பாப் போட்டி போன்ற பல செய்திகளைத் திரட்டி குறைந்த விலையில் எல்லாத்தரப்பட்ட மக்களும் படித்துப் பயன்பெறும் நோக்கத்தோடு நடத்தப்படுவதாகும். இதற்கு முன் அரசால் நடத்தப்பட்ட மேழிச் செல்வம், சீரணி, பாக்கியலட்சுமி போன்ற இதழ்கள் குறைந்த விலையில்